# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

## CURRENT AFFAIRS

## OCTOBER 26 2025 – TAMIL




https://t.me/ChinmayaTnpsc

# TAMILNADU

## 1.நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்:

**செய்தி :**

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மருத்துவ முகாம் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு.

**தேர்வுக்கு தேவையானவை :**

- 'நலம் காக்கும் ஸ்டாலின்' எனும் திட்டத்தை **2025 ஆகஸ்ட் மாதம் .2-ம்** தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- தமிழகம் முழுவதும் மொத்தம் 1,256 இடங்களில் மருத்துவ முகாம் நடைபெறும் என்று இந்த திட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.
- இந்த முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், சித்தா, மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான மருத்துவமுறைகள் உள்ளன.
- இலவசமாக முழு உடற்பரிசோதனை செய்யப்படுகிறது.

**பாடப்பகுதி : Health systems in Tamil Nadu.**

CHINMAYA ACADEMY CIVIL SERVICES

## 2.தமிழ்நாடு - ராம்சர்தளம் சதுப்பு நிலங்கள்- தரவுகள் :

**செய்தி :**

சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் 3,800 ஏக்கர் நிலப்பரப்பு, ராம்சர் தலமாக கடந்த 2022 ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்டது.

**தேர்வுக்கு தேவையானவை :**

| **வ. எண்** | **தமிழ்நாடு ராம்சர் தளத்தின் பெயர்** | **மாவட்டம்** |
|---|---|---|
| 1 | கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் | நாகப்பட்டினம் & திருவாரூர் |
| 2 | மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் | இராமநாதபுரம் |
| 3 | வேம்பனூர் ஈரநில வளாகம் | கன்னியாகுமரி |
| 4 | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் | ஈரோடு |
| 5 | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் | திருவாரூர் |
| 6 | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் | செங்கல்பட்டு |
| 7 | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் | திருநெல்வேலி |
| 8 | காரிக்கிளி பறவைகள் சரணாலயம் | செங்கல்பட்டு |
| 9 | பள்ளிக்கரணை சதுப்புநிலக் காப்புக் காடு | சென்னை |
| 10 | பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் | கடலூர் |

CHINMAYA ACADEMY CIVIL SERVICES

| வ. எண் | தமிழ்நாடு ராம்சர் தளத்தின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 11 | காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் |
| 12 | சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் |
| 13 | சுசீந்திரம் தேரூர் ஈரநில வளாகம் | கன்னியாகுமரி |
| 14 | வடுவூர் பறவைகள் சரணாலயம் | திருவாரூர் |
| 15 | கரைவெட்டி பறவைகள் சரணாலயம் | அரியலூர் |
| 16 | லாங்வுட் சோலைக் காப்புக் காடு | நீலகிரி |
| 17 | நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் | திருப்பூர் |
| 18 | கழுவேலி பறவைகள் சரணாலயம் | விழுப்புரம் |
| 19 | சக்கரக்கோட்டை பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் |
| 20 | தேர்த்தாங்கல் பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் |

CHINMAYA ACADEMY
CIVIL SERVICES

- அதிகபட்ச ராம்சர் தளங்களைக் கொண்ட மாவட்டம்: **இராமநாதபுரம் (5 தளங்கள்)**
- மிகப் பெரிய தளம்: **மன்னார் வளைகுடா (52,671.88 ஹெக்டேர்)**
- மிகச் சிறிய தளம்: **வேம்பனூர் ஈரநில வளாகம் (19.75 ஹெக்டேர்)**
- முதலில் அறிவிக்கப்பட்ட தளம்: **கோடியக்கரை (2002)**
- சமீபத்திய சேர்த்தல்கள் (2025): **சக்கரக்கோட்டை & தீர்த்தாங்கல் (இராமநாதபுரம்)**




CHINMAYA ACADEMY
CIVIL SERVICES

- **இராம்சர் சாசனம் (Ramsar Convention)** என்பது, ஈரநிலங்களின் பாதுகாப்பு, அவற்றின் தாங்குநிலைப் பயன்பாடு என்பவை தொடர்பான ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் ஆகும். இதை **ஈரநிலங்களுக்கான சாசனம்** என்றும் அழைப்பதுண்டு. 1971ல் இவ்வொப்பந்தம் **ஈரானில் உள்ள ராம்சர்** என்னும் நகரில் கையெழுத்தானது. இந்த நகரின் பெயரைத் தழுவியே ராம்சர் சாசனம் என்னும் பெயர் ஏற்பட்டது

**Syllabus: Environment and ecology .**

# ECONOMY

## 3.உலக பொருளாதார முன்னோட்டம் குறித்த அறிக்கை - சர்வதேச நிதியம் : ( World Economic Outlook Report - International Monetary Fund ) :

**தற்போதைய செய்தி :**

- இந்திய பொருளாதாரம் 2025-2026 நிதியாண்டில் **6.6 சதவீதம் வளர்ச்சி** அடையும் என சர்வதேச நிதியம் கணித்துள்ளது.
- உலகளவிலான பொருளாதார வளர்ச்சி **3.2 சதவீதமாக** இருக்கும் என சர்வதேச நிதியம் கணித்துள்ளது.

CHINMAYA ACADEMY
CIVIL SERVICES

**தேர்வுக்கு தேவையானவை :**

**சர்வதேச நாணய நிதியம் (IMF) :**

- தலைமையகம்: **வாஷிங்டன், டி.சி., அமெரிக்கா**
- உறுப்பினர்கள்: 191 நாடுகள்
- நிறுவப்பட்டது: ஜூலை 1944 (**பிரெட்டன் வூட்ஸ் மாநாடு**)
- தொடங்கப்பட்டது: **1945**
- நிறுவனர்கள்: **ஹாரி டெக்ஸ்டர் வைட் & ஜான் மேனார்ட் கெய்ன்ஸ்**
- முக்கிய நோக்கம்: உலகளாவிய பண ஒத்துழைப்பு
- நோக்கங்கள்: **நிதி நிலைத்தன்மை, வர்த்தக வசதி, அதிக வேலைவாய்ப்பு, நிலையான வளர்ச்சி, வறுமைக் குறைப்பு**

- தற்போதைய நிர்வாக இயக்குநர்: **கிறிஸ்டலினா ஜார்ஜீவா** (1 அக்டோபர் 2019 முதல்)




**Syllabus : International Institutions – IMF (International Monetary Fund).**

## SCIENCE AND TECHNOLOGY

### 4. மருந்து கண்டுபிடிப்புக்கான Cell2Sentence -Scale 27B AI மாதிரி:

- முழுப் பெயர்: **Cell2Sentence -Scale 27B**
- குறுகிய வடிவம்: C2S-அளவிலானது
- உருவாக்கியவர்: Google DeepMind மற்றும் Google Research
- மாதிரி வகை: AI-அடிப்படையிலான அடித்தள மாதிரி
- குடும்பம்: **Gemma open** - மாதிரி குடும்பம்
- கவனம் செலுத்தும் பகுதி: **தனிப்பட்ட செல்களின் மொழியைப் புரிந்துகொள்வது**
- முக்கிய சாதனை: புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய மருந்து கலவையை பரிந்துரைத்தது.

https://t.me/ChinmayaTnpsc

- மருந்து அடையாளம் காணப்பட்டது: **Silmitasertib (CX-4945)**
- நோக்கம்: மருந்து கண்டுபிடிப்பு மற்றும் உயிரி மருத்துவ ஆராய்ச்சியை துரிதப்படுத்துதல்.
- பயிற்சி தரவு: நோயாளி மற்றும் செல்-லைன் தரவுகளின் அடிப்படையில்
- விஞ்ஞானிகள்: **Shekoofeh Azizi மற்றும் Brian Perozzi**




CIVIL SERVICES

**Syllabus :Latest inventions in science and technology**

**ONELINER NOTES**

## 5.சென்னை உயர் நீதிமன்றம் :

- விக்டோரியா மகாராணியின் காப்புரிமை சாசனத்தால் **1862-ம் ஆண்டு** நிறுவப்பட்ட 3 உயர் நீதிமன்றங்களுள் சென்னை உயர் நீதிமன்றமும் ஒன்று. உலகில் **இரண்டாவது பெரிய நீதிமன்ற வளாகம்** என்ற பெருமை இதற்கு உண்டு.

- உலகின் **மிகப்பெரிய நீதிமன்ற வளாகம்** இந்தியாவின் ராஞ்சியில் உள்ள **ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம்** ஆகும், இது 165 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

## 6.மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் – அக்டோபர் :

- ஆண்டுதோறும் **அக்டோபர்** மாதத்தை மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருக்கிறது. இந்த மாதத்தை '**பிங்க் மாதம்**' என்றும் அழைக்கிறார்கள்.

